LORDS TODAY

LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Magazine : November 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & O wner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

10

KURAN 10



BHAGAVAD GITA 10

2021-16796675762

Lords மபால்ராஜ்
Founder | International President

LORDS CLUBS INTERNATIONAL

www.lordsclubs.com

தலையங்கம்...

உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

தொடர் 10



BIBLE Tamil
6 Page's
தொடரும்.....



KURAN Tamil
6 Page's
தொடரும்.....



BHAGAVAD GITA-Tamil
6 Page's
தொடரும்.....

உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம்.

அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

LORDS TODAY
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

BIBLE

மெகா தொடர்

PART -10

தொடக்கநூல் அதிகாரம் – 23 – திருவிவிலியம்

சாராவின் இறப்பு-மூதாதையரின் கல்லறை

1 சாரா நூற்றிருபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தார். சாராவின் வயது இதுவே.

2 கானான் நாட்டிலுள்ள எபிரோன் என்ற கிரியத்து அர்பா நகரில் சாரா இறந்தார். அவருக்காகப் புலம்பி அழுவதற்காக ஆபிரகாம் சென்றார்.

3 பிறகு, சடலம் இருந்த இடத்தைவிட்டு அவர் எழுந்து இத்தியரிடம் சென்று சொன்னது:

4 நான் உங்களிடையே அந்நியனும் அகதியுமாய் இருக்கிறேன். என் வீட்டில் இறந்தாரை நான் அடக்கம் செய்வதற்கான கல்லறை நிலத்தை உங்களுக்குரிய சொத்திலிருந்து எனக்கு விற்று விடுங்கள் என்று கேட்டார்.

5 இத்தியர் ஆபிரகாமுக்கு மறுமொழியாக;

6 எம் தலைவரே! கேளும். நீர் எங்களிடையே ஒரு வலிமைமிக்க தலைவராய் இருக்கிறீர். எங்கள் கல்லறைகளில் சிறந்த ஒன்றில் உமது வீட்டில் இறந்தாரை அடக்கம் செய்யலாம். உம் வீட்டில் இறந்தாரை தன் கல்லறையில் நீர் அடக்கம் செய்ய எங்களுள் எவனும் மறுக்க மாட்டான் என்றனர்.

7 அப்போது ஆபிரகாம் எழுந்து, அந்நாட்டு மக்களாகிய இத்தியர் முன் தாழ்ந்து வணங்கி,

8 அவர்களை நோக்கி, என் வீட்டில் இறந்தாரை நல்லடக்கம் செய்வதை நீங்கள் விரும்பினால், நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் சோகாரின் மகனான எப்ரோனிடம் எனக்காகப் பரிந்து பேசி,

9 அவருக்குச் சொந்தமானதும் அவரது வயலின் மூலையில் இருப்பதுமான மக்பேலா குகையை எனக்குத் தரும்படி செய்யுங்கள். உங்களிடையே எனக்கு உடைமையான கல்லறை நிலம் இருக்குமாறு முழு விலைக்கு எனக்கு அதை விற்றுவிடும்படி கேளுங்கள் என்றார்.

10 இத்தியனான எப்ரோன் மற்ற இத்தியரோடு அமர்ந்திருந்தான். அவன் நகரவாயிலுக்கு வரும் இத்தியர் அனைவரும் கேட்கும்படி, ஆபிரகாமை நோக்கி,

11 வேண்டாம், என் தலைவரே! நான் சொல்வதைக் கேளும். நிலத்தையும் அதிலுள்ள குகையையும் உமக்கு நான் கொடுத்து விடுகிறேன். என் இனத்தார் முன்னிலையிலேயே அதை நான் உமக்குக் கொடுத்து விடுகிறேன். உம் வீட்டில் இறந்தாரை அங்கு அடக்கம் செய்வீராக என்றான்.

12 அப்போது ஆபிரகாம் அந்நாட்டு மக்கள்முன் தாழ்ந்து வணங்கி,

13 அவர்கள் கேட்கும்படியாக எப்ரோனை நோக்கி, நான் சொல்வதைத் தயவு செய்து கேளும். நிலத்திற்கான பணத்தைத் தருகிறேன். பெற்றுக் கொள்ளும். அப்பொழுதுதான் என் வீட்டில் இறந்தோரை அங்கு நான் அடக்கம் செய்வேன் என்றார்.

14 அதற்கு எப்ரோன் ஆபிரகாமை நோக்கி.

15 என் தலைவரே! என் வார்த்தையைக் கேளும். நீர் கேட்கிற நிலம் நானூறு வெள்ளிக் காசுகள்தான் பெறும். நமக்குள்ளே இது என்ன? உம் வீட்டில் இறந்தாரை அடக்கம் செய்துகொள்ளும் என்றான்.

16 எப்ரோன் சொன்னதற்கு இசைந்த ஆபிரகாம் இத்தியர் முன்னிலையில் பேசியபடி நானூறு வெள்ளிக்காசுகளை அன்றைய வணிக வழக்கிற்கேற்ப நிறுத்துக் கொடுத்தார்.

17 இவ்வாறு, மக்பேலாவில், மம்ரே அருகில் எப்ரோனுக்குச் சொந்தமான நிலமும்,

BIBLE



அதிலிருந்த குகையும், நிலத்திலும் அதன் எல்லையைச் சுற்றிலும் இருந்த எல்லா மரங்களும்

18 நகர வாயிலுக்கு வரும் அனைத்து இத்தியர் முன்னிலையிலும் ஆபிரகாமுக்கு உடைமையாயின.

19 இவ்வாறு, மம்ரே அருகில் மக்பேலா நிலத்தின் கல்லறையில் ஆபிரகாம் தம் மனைவி சாராவை அடக்கம் செய்தார். இதுவே கானான் நாட்டில் இருக்கும் எபிரோன்.

20 இவ்வாறு, அந்நிலமும் அதிலிருந்த குகையும் இத்தியரிடமிருந்து ஆபிரகாமுக்கு உடைமையான கல்லறை நிலமாக உறுதி செய்யப்பட்டது.

தொடக்கநூல் அதிகாரம் – 24 – திருவிவிலியம்

ஈசாக்கு-ரெபேக்கா திருமணம்

1 ஆபிரகாம் வயது மிகுந்தவராய் முதுமை அடைந்தார். ஆண்டவர் அவருக்கு அனைத்திலும் ஆசி வழங்கியிருந்தார்.

2 ஒருநாள் அவர் தம் வீட்டின் வேலைக்காரர்களில் மூத்தவரும், தமக்குரிய அனைத்திற்கும் அதிகாரியுமானவரை நோக்கி, உன் கையை என் தொடையின் கீழ் வைத்து,

3 விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணையிட்டுச் சொல்; நான் வாழ்ந்துவரும் இக் கானான் நாட்டுப் பெண்களிடையே என் மகனுக்குப் பெண்கொள்ளமாட்டாய் என்றும்

4 என்சொந்த நாட்டிற்குப் போய், என் உறவினரிடம் என் மகன் ஈசாக்கிற்குப் பெண்கொள்வாய் என்றும் சொல் என்றார்.

5 அதற்கு அவர், ஒரு வேளை பெண் என்னோடு இந்நாட்டிற்கு வர மறுத்து விட்டால் தாங்கள் விட்டுவந்த அந்நாட்டிற்குத் தங்கள் மகனைக் கூட்டிக் கொண்டு போகலாமா? என்று கேட்டார்.

6 அதற்கு ஆபிரகாம், அங்கே என் மகனை ஒருக்காலும் கூட்டிக்கொண்டு போகாதே. கவனமாயிரு.

7 தந்தை வீட்டினின்றும் நான் பிறந்த நாட்டினின்றும் என்னை அழைத்து வந்து என்னோடு பேசி, இந்த நாட்டை உன் வழிமரபினருக்குத் தருவேன் என்று ஆணையிட்டுக் கூறிய அந்த விண்ணுலகின் கடவுளாகிய ஆண்டவரே உனக்கு முன் தம் தூதரை அனுப்பி வைப்பார். நீ போய், அங்கே என் மகனுக்குப் பெண்கொள்.

8 உன்னோடு வர அப்பெண் விரும்பாவிடில் எனக்கு நீ அளித்த வாக்குறுதியினின்று விடுதலை பெறுவாய். என் மகனை மட்டும் அங்கே கூட்டிக் கொண்டு போகாதே என்றார்.

9 அவ்வாறே, அவ்வேலைக்காரரும் தம் தலைவர் ஆபிரகாமின் தொடையின் கீழ் கையை வைத்து அக்காரியத்தைக் குறித்து வாக்குறுதியளித்தார்.

10 பின் தம் தலைவரின் ஒட்டகங்களிலிருந்து பத்து ஒட்டகங்களை அவிழ்த்துக் கொண்டு, அவருக்குரிய எல்லாவற்றிலும் சிறந்தவற்றைத் தம் கையோடு எடுத்துக்கொண்டு மெசபொத்தாமியாவிலிருந்த நாகோர் நகர் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

11 பெண்கள் தண்ணீர் எடுக்கவரும் மாலை நேரத்தில், நகர்ப்புறமிருந்த கிணற்றின் அருகில் ஒட்டகங்களுக்குத் தண்ணீர் காட்டுமாறு அவர் அவற்றை மண்டியிடச் செய்தார்.

12 அப்போது அவர் சொன்னது, என் தலைவர் ஆபிரகாமின் கடவுளாகிய ஆண்டவரே, எனக்கு இன்று வெற்றி அளித்தருளும். என் தலைவர் ஆபிரகாமுக்கு இரக்கம் காட்டும்.

BIBLE

13 இதோ நான் நீரூற்றின் அருகில் நிற்கிறேன். நகர் மக்களின் புதல்வியர் தண்ணீர் எடுக்க இங்கே வருவார்கள்.

14 அப்பொழுது நான் தண்ணீர் பருகும்படி உன் குடத்தைச் சாய்த்துக் கொடு என்று கேட்க, குடியுங்கள்; மேலும் உங்கள் ஒட்டகங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் இறைத்து ஊற்றுவேன் என்று எந்த இளம்பெண் மறுமொழி சொல்வாளோ, அவளே உம் ஊழியனாகிய ஈசாக்கிற்கு உம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவள் ஆவாளாக! நீர் என் தலைவருக்குப் பேரன்பு காட்டினீர் என்று இதனால் நானும் அறிந்து கொள்வேன் என்றார்.

15 அவர் இவ்வார்த்தைகளைத் தமக்குள் சொல்லி முடிக்குமுன்பே, இதோ ரெபேக்கா தம் தோள்மீது குடத்தை வைத்துக்கொண்டு வந்தாள். அவள் ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கும் அவர் மனைவி மில்க்காவுக்கும் பிறந்த பெத்துவேலின் மகள்.

16 அவள் எழிமிக்க தோற்றமுடையவள்; ஆண் தொடர்பு அறியாத கன்னிப்பெண். அவள் நீரூற்றுக்குள் இறங்கிக் குடத்தை நிரப்பிக் கொண்டு மேலேறி வந்தாள்.

17 ஆபிரகாமின் வேலைக்காரர் அவளைச் சந்திக்க ஓடிச்சென்று, உன் குடத்தினின்று எனக்குக் கொஞ்சம் தண்ணீர் குடிக்கத் தருவாயா? என்று கேட்டார்.

18 உடனே அவளும் குடியுங்கள் ஐயா என்று விரைந்து தம் குடத்தை தோளினின்று இறக்கி அவருக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

19 அவர் குடித்து முடித்ததும், மீண்டும் அவரை நோக்கி, உங்கள் ஒட்டகங்களும் குடித்து முடியுமட்டும் நான் தண்ணீர் இறைத்துக் கொடுப்பேன் என்றாள்.

20 குடத்து நீரைத் தொட்டியில் விரைவாய் ஊற்றிவிட்டு, மேலும் தண்ணீர் இறைக்க நீரூற்றுக்குள் ஓடிச் சென்று ஒட்டகங்கள் அனைத்திற்கும் தண்ணீர் இறைத்து ஊற்றினாள்.

21 அந்த வேலைக்காரர் இதைக்கண்டு வாயடைத்துப்போய் தமது பயணத்திற்கு ஆண்டவர் வெற்றியளித்தாரா இல்லையா என்று அறியும்படி அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

22 ஒட்டகங்கள் நீர் குடித்து முடித்தபின் அவர் அவளுக்கு ஆறு கிராம் நிறையுள்ள பொன் மூக்கணியும், நூற்று இருபது கிராம் நிறையுள்ள இரண்டு காப்புகளும் கொடுத்தார்.

23 பின்னர், அவளை நோக்கி, நீ யாருடைய மகள்? சொல்! உன் தந்தையின் வீட்டில் நாங்கள் இரவு தங்குவதற்கு இடம் இருக்குமா? என்று வினவினார்.

24 அவளோ மறுமொழியாக, நாகோருக்கு மில்க்கா பெற்ற மகனான பெத்துவேலின் மகள் நான் என்றாள்.

25 மேலும், எங்கள் வீட்டில் வைக்கோலும் தீவனமும் மிகுதியாக இருப்பதுமன்றி, தங்குவதற்கு இடமும் உண்டு என்றாள்.

26 அந்த மனிதர் ஆண்டவரை வணங்கித் தொழுது,

27 என் தலைவர் ஆபிரகாமின் கடவுளாகிய ஆண்டவர் போற்றி! போற்றி! என் தலைவருக்கு அவர் காட்டியிருந்த பேரன்பையும் உண்மையையும் விட்டு விலகவில்லை. என் தலைவரின் சகோதரன் வீட்டிற்கு வரும் வழியில் அவர் என்முன்னே சென்றார் என்றார்.

28 அந்த இளம்பெண் ஓடிச் சென்று தன் தாயின்வீட்டில் உள்ளோருக்கு இந்நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறினாள்.

29 ரெபேக்காவுக்கு லாபான் என்னும் சகோதரன் இருந்தான். அவன் வெளியே வந்து அந்த மனிதரைப் பார்க்க நீரூற்றை நோக்கி ஓடினான்.

30 ஏனெனில், தன் சகோதரி அணிந்திருந்த மூக்கணியையும் கைக்காப்புகளையும் அவன்

BIBLE

கண்டிருந்தான். அந்த மனிதர் என்னிடம் இவ்வாறு சொன்னார் என்று தன் சகோதரி ரெபேக்கா கூறிய வார்த்தைகளையும் கேட்டிருந்தான். அவன் அந்த ஆளிடம் ஓடிச்சென்று நீரூற்றருகில் ஒட்டகங்களோடு அவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான்.

31 அவன் அவரை நோக்கி, ஆண்டவரின் ஆசி பெற்றவரே வருக! இங்குத் தாங்கள் வெளியே நிற்பது ஏன்? உமக்காக வீட்டையும், ஒட்டகங்களுக்காக இடத்தையும் துப்புரவு செய்து வைத்திருக்கிறேன் என்று சொன்னான்.

32 அவன் அவரை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து, ஒட்டகங்களின் சுமையை இறக்கி, வைக்கோலும் தீவனமும் இட்டு, அவருக்கும் அவரோடு வந்த ஆள்களுக்கும் கை கால் கழுவத் தண்ணீர் கொடுத்தான்.

33 பின் அவருக்கு உணவு பரிமாறப்பட்டது. அவரோ, நான் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லுமுன் சாப்பிட மாட்டேன் என, லாபான் சொல்லும் என்றான்.

34 அப்பொழுது அவர், நான் ஆபிரகாமின் வேலைக்காரன்.

35 தலைவருக்கு ஆண்டவர் மிகுதியான ஆசி வழங்கி, அவரைச் செல்வராக்கி, ஆடு மாடுகளையும், பொன் வெள்ளியையும், வேலைக்காரர் வேலைக்காரிகளையும், ஒட்டகங்கள் கழுதைகளையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

36 மேலும், என் தலைவரின் மனைவியாகிய சாரா தம் வயது முதிர்ந்த காலத்தில் என்
தலைவருக்கு ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அவரும் அவனுக்குத் தமக்குரிய
அனைத்தையும் கொடுத்திருக்கிறார்.37என் தலைவர் என்னை ஆணையிடச் செய்து,
நான் வாழ்ந்து வரும் இந்தக் கானான் நாட்டுப் பெண்களிடையே என் மகனுக்கு நீ பெண்
கொள்ளமாட்டாய் என்றும்

38 தந்தையின் வீட்டாரிடமும், என் இனத்தாரிடமும் சென்று என் மகனுக்கு நீ பெண்கொள்வாய் என்றும் சொல் என்றார்.

39 அப்போது நான் என் தலைவரை நோக்கி, ஒரு வேளை பெண் என்னோடு வரவில்லையென்றால்? என்று வினவினேன்.

40 அதற்கு அவர் மறுமொழியாக, ஆண்டவர் திருமுன் நான் வாழ்ந்து வருபவன். அவர் உன்னோடு தம் தூதரை அனுப்பி உனது பயணத்தை வெற்றிபெறச் செய்வார். என் இனத்தாரிடையே, என் தந்தையின் குடும்பத்திலிருந்து என் மகனுக்குப் பெண்கொள்வாய்.

41 அப்பொழுது நீ எனக்கு அளித்த வாக்குறுதியினின்று விடுதலை பெறுவாய். அப்படியே நீ என் இனத்தாரிடம் போய்க் கேட்டும், அவர்கள் தராவிட்டால், நீ எனக்கு அளித்த வாக்குறுதியினின்று விடுதலை பெறுவாய் என்றார்.

42 இன்று நான் அந்த நீரூற்றின் அருகில் வந்தவுடன், என் தலைவர் ஆபிரகாமின் கடவுளாகிய ஆண்டவரே, நான் மேற்கொண்ட பயணத்திற்குக் கருணைகூர்ந்து வெற்றி தாரும்.

43 இதோ நான் நீரூற்றின் அருகில் நிற்கிறேன். தண்ணீர் எடுக்க வரும் இளம் பெண்ணிடம் நான் பருகும்படி உன் குடத்திலிருந்து எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா என்றுகேட்க,

44 அவள், குடியுங்கள்; மேலும் உங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் இறைத்து ஊற்றுவேன் , என்று சொல்வாளாயின், அவளே என் தலைவரின் மகனுக்கு ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்டவள் ஆவாள் என்று

45 என் மனத்திற்குள் சொல்லி முடிக்கும் முன்பே, இதோ ரெபேக்கா தன் தோள்மீது குடத்தை வைத்துக்கொண்டு வந்தாள். நீர் இறைக்குமாறு அவள் நீரூற்றுக்குள் இறங்கினாள். அப்பொழுது நான் அவளிடம் எனக்குக் குடிக்கத் தா என்றேன்.

BIBLE



46 அவள் உடனே தோளிலிருந்து குடத்தை இறக்கி, குடியுங்கள்; உங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் காட்டுவேன் , என்று கூற, நானும் குடித்தேன்; ஒட்டகங்களுக்கும் அவள் தண்ணீர் காட்டினாள்.

47 பின்பு, நான் அவளை நோக்கி, நீ யாருடைய மகள்? என, நான் நாகோருக்கு மில்க்கா பெற்ற மகனான பெத்துவேலின் மகள் என்றாள். உடனே நானும் அவள் மூக்கில் மூக்கணியும் அவள் கையில் காப்புகளையும் அணிவித்தேன்.

48 மேலும், நான் ஆண்டவரை வணங்கித் தொழுதேன். ஏனெனில், என் தலைவரின் சகோதரரின் மகளையே, அவருடைய மகனுக்காகப் பெண் பேச வருமாறு நேர் வழியில் என்னை நடத்தி வந்த என் தலைவர் ஆபிரகாமின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றினேன்.

49 இப்பொழுது நீர் என் தலைவருக்கு அன்பும் நம்பிக்கையும் காட்டுவீரா, இல்லையா? என்று எனக்குத் தெரிவியும்: அதற்கேற்ப வலமோ இடமோ எங்காகிலும் திரும்பிச் செல்வேன் என்றார்.

50 அதற்கு லாபானும் பெத்துவேலும் மறுமொழியாக, இச்செயல் ஆண்டவரால் நிகழ்ந்துள்ளது. நாங்கள் உம்மிடம் இதற்குச் சாதகமாகவோ பாதகமாகவோ ஒன்றும் சொல்லக் கூடாது.

51 இதோ, ரெபேக்கா உம்முன் இருக்கிறாள். ஆண்டவர் சொன்னபடியே அவள் உம் தலைவருடைய மகனுக்கு மனைவி ஆகும்படி அவளை அழைத்துக் கொண்டு போங்கள் என்றார்.

52 ஆபிரகாமின் வேலைக்காரர் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டதும் ஆண்டவரைத் தொழுதார்.

53 பிறகு, அவர் பொன், வெள்ளி நகைகளையும் ஆடைகளையும் எடுத்து ரெபேக்காவுக்குக் கொடுத்தார். அவர் சகோதரருக்கும் தாய்க்கும் விலையுயர்ந்த அன்பளிப்புகளையும் கொடுத்தார்.

54 பின் அவரும் அவரோடு இருந்தவர்களும் உண்டு, குடித்து அங்கு இரவைக் கழித்தார்கள். அவர்கள் மறுநாள் காலை எழுந்ததும் அவர், என் தலைவரிடம் போக விடை தாருங்கள் என்றார்.

55 ரெபேக்காவின் சகோதரனும் தாயும் அவரை நோக்கி, பெண் பத்து நாள்களேனும் எங்களோடு இருக்கட்டும்; அதன் பின் புறப்பட்டுப் போகலாம் என்று மறுமொழி கூறினர்.

56 ஆனால் அவர் அவர்களிடம், என்னை நீங்கள் தாமதப்படுத்தாதீர்கள். ஆண்டவர் என் பயணத்திற்கு வெற்றியைத் தந்திருக்கிறார். என் தலைவரிடம் நான் செல்லும்படி விடை கொடுங்கள் என்றார்.

57 அதற்கு அவர்கள், பெண்ணை அழைத்து அவள் விருப்பத்தைக் கேட்போம் என்றனர்.

58 அப்படியே ரெபேக்காவை அழைத்து, இவரோடு போகிறாயா? என்று அவரைக் கேட்டனர். அவரும் போகிறேன் என்றார்.59எனவே, அவர்கள் தங்கள் சகோதரி ரெபேக்காவையும் அவர் தாதியையும், ஆபிரகாமின் வேலைக்காரரையும் அவரைச் சேர்ந்தவர்களையும், அனுப்பி வைத்தனர்.

60 அப்பொழுது அவர்கள் ரெபேக்காவுக்கு ஆசி வழங்கி அவரை நோக்கி,

எம் சகோதரியே!

ஆயிரம் ஆயிரமாக

நீ பெருகுவாய்.

உன் வழி மரபினர்

BIBLE



தங்கள் பகைவரின் நகர்களை
உரிமையாக்கிக் கொள்வார்களாக! என்றனர்.

61 பின்பு, ரெபேக்காவும் அவருடைய தோழியரும் ஒட்டகங்களின் மீதேறி, அந்த மனிதரைத் தொடர்ந்தனர். அந்த வேலைக்காரர் அவரை அழைத்துக் கொண்டு போனார்.

62 இதற்கிடையில், பெயேர்லகாய்ரோயி என்ற இடத்திலிருந்து ஈசாக்கு புறப்பட்டு நெகேபு பகுதியில் வாழ்ந்து வந்தார்.

63 மாலையில் வெளியே வயல்புறம் சென்றபோது அவர் கண்களை உயர்த்திப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வருவதைக் கண்டார்.

64 ரெபேக்காவும் கண்களை உயர்த்தி ஈசாக்கைப் பார்த்தார். உடனே அவர் ஒட்டகத்தைவிட்டு இறங்கினார்.

65 அவர் அந்த வேலைக்காரரிடம், வயலில் நம்மைச் சந்திக்க வந்து கொண்டிருக்கும் அவர் யார்? என்று கேட்டார். அவ்வேலைக்காரரும், அவர்தாம் என் தலைவர் என்றார். உடனே ரெபேக்கா தம் முக்காட்டை எடுத்து தம்மை மூடிக்கொண்டார்.

66 அப்பொழுது அவ்வேலைக்காரர் ஈசாக்கிடம் தாம் செய்தது அனைத்தையும் பற்றிக் கூறினார்.

67 ஈசாக்கு தம் தாயார் சாராவின் கூடாரத்துக்குள் ரெபேக்காவை அழைத்துச் சென்று மணந்துகொண்டார். அவரும் ஈசாக்குக்கு மனைவியானார். அவர் ரெபேக்கா மீது அன்பு வைத்திருந்தார். இவ்வாறு, தம் தாயின் மறைவுக்குப் பிறகு ஈசாக்கு ஆறுதல் அடைந்தார்.

தொடரும்.....

KURAN மெகா தொடர்

PART - 10



2:173 فَمَنِ اضْطُرَّ غَيْرَ مَ الْخِنْزِيْرِ وَمَآ اُهِلَّ بِهٖ لِغَيْرِ اللّٰهِۚ اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْ
اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌبَاغٍ وَّلَا عَادٍ فَلَآ اِثْمَ عَلَيْهِ

2:173. தானாகவே செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்டதும் ஆகியவைகளைத்தான் உங்கள் மீது ஹராமாக ஆக்கியிருக்கிறான்; ஆனால் எவரேனும் பாவம் செய்யாத நிலையில் - வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்ப்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை; நிச்சயமாக அல்லாஹ் கருணைமிக்கோனும், மன்னிப்பவனுமாக இருக்கின்றான்.

2:174 أَكُلُوْنَ فِىْ اِنَّ الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَآ اَنْزَلَ اللّٰهُ مِنَ الْكِتٰبِ وَ يَشْتَرُوْنَ بِهٖ ثَمَنًا قَلِيْلًا ۙ اُولٰٓـئِكَ مَا يَ
مْ عَذَابٌ اَ لِيْمٌبُطُوْنِهِمْ اِلَّا النَّارَ وَلَا يُكَلِّمُهُمُ اللّٰهُ يَوْمَ الْقِيٰمَةِ وَلَا يُزَكِّيْهِمْ ۖ وَلَهُ

2:174. எவர், அல்லாஹ் வேதத்தில் அருளியவற்றை மறைத்து அதற்குக் கிரயமாக சொற்பத் தொகை பெற்றுக் கொள்கிறார்களோ, நிச்சயமாக அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தவிர வேறெதனையும் உட்கொள்ளவில்லை; மறுமை நாளில் அல்லாஹ் அவர்களிடம் பேசவும் மாட்டான்; அவர்களைப் பரிசுத்தமாக்கவும் மாட்டான்; அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையும் உண்டு.

2:175 ۚ فَمَآ اَصْبَرَهُمْ عَلَى النَّارِ اُولٰٓـئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الضَّلٰلَةَ بِالْهُدٰى وَالْعَذَابَ بِالْمَغْفِرَةِ

2:175. அவர்கள்தாம் நேர்வழிக்கு பதிலாக வழிகேட்டையும்; மன்னிப்பிற்கு பதிலாக வேதனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள். இவர்களை நரக நெருப்பைச் சகித்துக் கொள்ளச் செய்தது எது?

| الَّذِيْنَ اخْتَلَفُوْا فِى الْكِتٰبِ لَفِىْ شِقَاقٍۢ بَعِيْدٍ ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ نَزَّلَ الْكِتٰبَ بِالْحَـقِّ وَاِنَّ 2:176

2:176. இதற்குக் காரணம்; நிச்சயமாக அல்லாஹ் இவ்வேதத்தை உண்மையுடன் அருள் செய்தான்; நிச்சயமாக இன்னும் இவ்வேதத்திலே கருத்து வேறுபாடு கொண்டவர்கள் (சத்தியத்தை விட்டும்) பெரும் பிளவிலேயே இருக்கின்றனர்.

يَوْمِ لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَ الْمَغْرِبِ وَلٰـكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْ 2:177
ي حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنَ وَابْنَ وَاٰتَى الْمَالَ عَلٰىالْاٰخِرِ وَالْمَلٰٓـئِكَةِ وَالْكِتٰبِ وَالنَّبِيّٖنَ
وَفِى الرِّقَابِ وَالسَّآئِلِيْنَ السَّبِيْلِۚ وَاٰتَى الزَّکٰوةَ وَاَقَامَ الصَّلٰوةَ عٰهَدُوْا اِذَا بِعَهْدِهِمْ وَالْمُوْفُوْنَ ۚ
وَالضَّرَّآءِ وَالْبَاْسَآءِ فِى الصّٰبِرِيْنَ وَ صَدَقُوْا الَّذِيْنَ اُولٰٓـئِكَ الْبَاْسِ وَحِيْنَ الْمُتَّقُوْنَ هُمُ وَاُولٰٓـئِكَ ۚ

2:177. புண்ணியம் என்பது உங்கள் முகங்களைக் கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக்கொள்வதில் இல்லை; ஆனால் புண்ணியம் என்பது அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாளின் மீதும், மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதல்; (தன்) பொருளை இறைவன் மேலுள்ள நேசத்தின் காரணமாக, பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்(ஏழை)களுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், (அடிமைகள், கடனாளிகள்) போன்றோரின் மீட்புக்காகவும் செலவு செய்தல்; இன்னும் தொழுகையை ஒழுங்காகக் கடைப்பிடித்து முறையாக ஜகாத் கொடுத்து வருதல்(இவையே புண்ணியமாகும்); இன்னும் தாம் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும்; (வறுமை, இழப்பு போன்ற) துன்பத்திலும், (நோய் நொடிகள் போன்றவற்றின்) கஷ்டத்திலும், யுத்த சமயத்திலும், உறுதியுடனும்,



பொறுமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்கள்; இன்னும் அவர்கள் தாம் முத்தகீன்கள்(பயபக்தியுடையவர்கள்).

2:178 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِى الْقَتْلٰى ؕ اَلْحُرُّ بِالْحُـرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ
وَالْاُنْثٰى بِالْاُنْثٰى ؕ فَمَنْ عُفِىَ لَهٗ مِنْ اَخِيْهِ شَىْءٌ فَاتِّبَاعٌ ۢ بِالْمَعْرُوْفِ وَاَدَآءٌ اِلَيْهِ بِاِحْسَانٍ ؕ ذٰلِكَ تَخْفِيْفٌ
مِّنْ رَّبِّكُمْ وَرَحْمَةٌ ؕ فَمَنِ اعْتَدٰى بَعْدَ ذٰلِكَ فَلَهٗ عَذَابٌ اَلِيْمٌ

2:178. ஈமான் கொண்டோரே! கொலைக்காகப் பழி தீர்ப்பது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது- சுதந்திரமுடையவனுக்குச் சுதந்திரமுடையவன்; அடிமைக்கு அடிமை; பெண்ணுக்குப் பெண் இருப்பினும் (கொலை செய்த) அவனுக்கு அவனது (முஸ்லிம்) சகோதரனா(கிய கொலையுண்டவனின் வாரிசுகளா)ல் ஏதும் மன்னிக்கப்படுமானால், வழக்கமான முறையைப் பின்பற்றி (இதற்காக நிர்ணயிக்கப் பெறும்) நஷ்ட ஈட்டைக் கொலை செய்தவன் பெருந்தன்மையுடனும், நன்றியறிதலுடனும் செலுத்திவிடல் வேண்டும் - இது உங்கள் இறைவனிடமிருந்து கிடைத்த சலுகையும், கிருபையுமாகும்; ஆகவே, இதன் பிறகு (உங்களில்) யார் வரம்பு மீறுகிறாரோ, அவருக்குக் கடுமையான வேதனையுண்டு.

2:179 وَلَـكُمْ فِى الْقِصَاصِ حَيٰوةٌ يّٰۤاُولِى الْاَلْبَابِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

2:179. நல்லறிவாளர்களே! கொலைக்குப் பழி தீர்க்கும் இவ்விதியின் மூலமாக உங்களுக்கு வாழ்வுண்டு (இத்தகைய குற்றங்கள் பெருகாமல்) நீங்கள் உங்களை(த் தீமைகளில் நின்று) காத்துக் கொள்ளலாம்.



2:180 ةُ لِلْوَالِدَيْنِ وَالْأَقْرَبِيْنَ ۚۚ اَلْوَصِيَّ كُتِبَ عَلَيْكُمْ اِذَا حَضَرَ اَحَدَكُمُ الْمَوْتُ اِنْ تَرَكَ خَيْرًا
بِالْمَعْرُوْفِ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ

2:180. உங்களில் எவருக்கு மரணம் நெருங்கி விடுகிறதோ அவர் ஏதேனும் பொருள் விட்டுச் செல்பவராக இருப்பின், அவர் (தம்) பெற்றோருக்கும், பந்துக்களுக்கும் முறைப்படி வஸிய்யத்து (மரண சாஸனம்)செய்வது விதியாக்கப்பட்டிருக்கிறது; (இதை நியாயமான முறையில் நிறைவேற்றுவது) முத்தகீன்கள்(பயபக்தியுடையோர்) மீது கடமையாகும்.

2:181 اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ فَمَنْۢ بَدَّلَهٗ بَعْدَمَا سَمِعَهٗ فَاِنَّمَآ اِثْمُهٗ عَلَى الَّذِيْنَ يُبَدِّلُوْنَهٗ ؕ اِنَّ

2:181. வஸிய்யத்தை (மரண சாஸனத்தை)க் கேட்ட பின்னர், எவரேனும் ஒருவர் அதை மாற்றினால், நிச்சயமாக அதன் பாவமெல்லாம் யார் அதை மாற்றுகிறார்களோ அவர்கள் மீதே சாரும் - நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) கேட்பவனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான்.

2:182 فَمَنْ خَافَ مِنْ مُّوْصٍ جَنَفًا اَوْ اِثْمًا فَاَصْلَحَ بَيْنَهُمْ فَلَآ اِثْمَ عَلَيْهِ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

2:182. ஆனால் வஸிய்யத்து செய்பவரிடம்(பாரபட்சம் போன்ற) தவறோ அல்லது மன முரண்டான அநீதமோ இருப்பதையஞ்சி ஒருவர் (சம்பந்தப்பட்டவர்களிடையே) சமாதானம் செய்து (அந்த வஸிய்யத்தை) சீர் செய்தால் அ(ப்படிச் செய்ப)வர் மீது குற்றமில்லை; நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனுமாகவும் இருக்கிறான்.

2:183 الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَۙ يٰٓاَيُّهَا



2:183. ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது; (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்

وَعَلَى الَّذِيْنَ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ 2:184
ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّـكُمْ اِنْ كُنْتُمْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍؕ فَمَنْ
تَعْلَمُوْنَ

2:184. (இவ்வாறு விதிக்கப் பெற்ற நோன்பு) சில குறிப்பட்ட நாட்களில் (கடமையாகும்); ஆனால் (அந்நாட்களில்) எவரேனும் நோயாளியாகவோ, அல்லது பயணத்திலோ இருந்தால் (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்னால் வரும் நாட்களில் நோற்க வேண்டும்; எனினும்(கடுமையான நோய், முதுமை போன்ற காரணங்களினால்) நோன்பு நோற்பதைக் கடினமாகக் காண்பவர்கள் அதற்குப் பரிகாரமாக - ஃபித்யாவாக - ஒரு மிஸ்கீனுக்கு (ஏழைக்கு) உணவளிக்க வேண்டும்; எனினும் எவரேனும் தாமாகவே அதிகமாகக் கொடுக்கிறாரோ அது அவருக்கு நல்லது - ஆயினும் நீங்கள் (நோன்பின் பலனை அறிவீர்களானால்), நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்கு நன்மையாகும் (என்பதை உணர்வீர்கள்).

رْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَ بَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِۚ فَمَنْ شَهْرُ رَمَضَانَ الَّذِىْٓ اُنْزِلَ فِيْهِ الْقُ 2:185
ؕ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَؕ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ
وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰٮكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ الْعُسْرَ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ

2:185. ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான



வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும்; (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது; ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்; எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கிறாரோ (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்வரும் நாட்களில் நோற்க வேண்டும்; அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை; குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).

2:186 وَاِذَا سَاَلَكَ عِبَادِىْ عَنِّىْ فَاِنِّىْ قَرِيْبٌ‌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ‌ فَلْيَسْتَجِيْبُوْا لِىْ وَلْيُؤْمِنُوْا بِىْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

2:186. (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்; "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்; அவர்கள் என்னிடமே(பிரார்த்தித்துக்) கேட்கட்டும்; என்னையே நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்" என்று கூறுவீராக.

தொடரும்.....

மெகா தொடர் PART - 10



व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।
तदेकं वद निश्चित्य येन श्रेयोऽहमाप्नुयाम् ॥२॥

குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயங்
கச் செய்கிறாய். ஆதலால் எது எனக்கு நன்மை
தருமென்பதை உறுதிப்படுத்தி ஒரே வார்த்தை
யாகச் சொல். 2

श्रीभगवानुवाच—

लोकेऽस्मिन्द्विविधा निष्ठा
पुरा प्रोक्ता मयाऽनघ ।
ज्ञानयोगेन साङ्ख्यानां
कर्मयोगेन योगिनाम् ॥ ३ ॥

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்—

பாபமொன்றுமில்லாத அர்ஜுனா, இவ்
வுலகத்தில் இரண்டுவித நிஷ்டை முன்னர்
என்னால் கூறப்பட்டது, ஸாங்க்யர்களின் ஞான
யோகத்தால் எய்துவது, யோகிகளின் கர்ம
யோகத்தால் எய்துவது என. 3



न कर्मणामनारम्भान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥ ४ ॥

தொழில்களைத் தொடங்காமலே யிருப்பதனால் மனிதன் செயலற்ற நிலை யடைவதில்லை. துறவினாலேயே மனிதன் ஈடேற்றம் பெற்று விட மாட்டான். 4

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥ ५ ॥

எவனும் ஒரு கணப் பொழுதேனும் செய்கையின்றி யிருப்பதில்லை. இயற்கையில் விளையும் குணங்களே எல்லா உயிர்களையும் அவசமாகத் தொழில் புரிவிக்கின்றன. 5

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥

கர்மேந்திரியங்களை அடக்கிக் கொண்டு, ஆனால், இந்திரிய விஷயங்களை மனதால் ஸ்மரித்துக் கொண்டிருப்போனாகிய மூடாத்மா பொய்யொழுக்க முடையவனென்று சொல்லப்படுகிறான். 6



यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥ ७ ॥

அர்ஜுனா, எவன் இந்திரியங்களை மனதால் கட்டுப்படுத்திக்கொண்டு, கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் பண்ணுகிறானோ, அவன் சிறந்தவன். 7

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्राऽपि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥ ८ ॥

விதிக்கப்பட்ட தொழிலை நீ செய். தொழில் தொழிலின்மையைக் காட்டிலும் சிறந்ததன்றோ? தொழிலின்றி இருப்பதால் உடம்பைக் கொண்டு செலுத்துதல்கூட உனக்கியலாமல் போய் விடும். 8

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥ ९ ॥

வேள்வியின் பொருட்டென்று செய்யப்படுவது தவிர மற்றைத் தொழில் மனிதருக்குத் தளையாகிறது. ஆதலால், குந்தி மகனே, பற்றைக் களைந்து தொழில் செய்துகொண்டிரு. 9



सहयज्ञाः प्रजाः सृष्ट्वा
पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्व-
मेष वोऽस्त्विष्टकामधुक् ॥ १० ॥

முன்பு பிரம தேவன் வேள்வியுடனே உயிர்க்
குலத்தை ஒருமிக்கப் படைத்துச் சொல்லினான்:
"இதனால் பல்குவீர்கள், நீங்கள் விரும்பும் விருப்
பங்களை யெல்லாம் உங்களுக் கிது கறந்து
தரும்."
10

देवान्भावयतानेन
ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः
श्रेयः परमवाप्स्यथ ॥ ११ ॥

இதனால் தேவர்களைக் கருதக் கடவீர்; அந்த
தேவர் உங்களைக் கருதக் கடவர். (இங்ஙனம்)
பரஸ்பரமான பாவனை செய்வதனால் உயர்ந்த
நலத்தை எய்துவீர்கள்.
11



इष्टान्भोगान्हि वो देवा
दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो
यो भुङ्क्ते स्तेन एव सः ॥ १२ ॥

வேள்வியில் பாவனை செய்யப்பட்ட தேவர்
உங்களுக்கு விரும்பிய போகங்களை யெல்லாந்
தருவர். அவர்களுக்குக் கைம்மாறு செலுத்தா
மல் அவர்கள் கொடுப்பதை உண்போன் கள்
வனே யாவான். 12

यज्ञशिष्टाशिनः सन्तो
मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा
ये पचन्त्यात्मकारणात् ॥ १३ ॥

வேள்வியின் மிச்சத்தை யுண்ணும் நல்லோர்
எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள்.
தம் பொருட்டென்று மாத்திரமே உணவு
சமைக்கும் பாவிகள் பாவத்தை உண்ணுகி
றார்கள். 13



अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्नसम्भवः ।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः ॥ १४ ॥

அன்னத்தால் உயிர்கள் சமைகின்றன. மழையால் உணவு தோன்றுகிறது. மழை வேள்வியால் ஆகிறது. வேள்வி செய்கையினின்று பிறப்பது. 14

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माऽक्षरसमुद्भवम् ।
तस्मात्सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥१५॥

செய்கை பிரமத்தினின்றும் பிறப்பதென்றுணர். பிரமம் அமிர்தத்தில் தோன்றுவது. ஆதலால் எங்கும் நிறைந்த பிரமம் எப்போதும் வேள்வியில் நிலைபெற்றது. 15

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥

இங்ஙனம் சுழலும் வட்டத்தை இவ்வுலகில் பின்பற்றி ஒழுகாதோன் பாப வாழ்க்கையுடையான், புலன்களிலே களித்தான்; பார்த்தா, அவன் வாழ்க்கை விழலேயாம். 16

தொடரும்.....

Edible oil industry body Solvent Extractors' Association of India on Friday said it was "really magnanimous" on part of the Prime Minister to announce repeal of the three farm laws but said that reforms were necessary for Indian agriculture sector to become competitive and improve farmers income.

The association hoped that agri reforms should continue to be implemented in more politically acceptable manner.

Prime Minister Narendra Modi announced that the government has decided to repeal the three farm laws, which were at the centre of protests by farmers for the past year, and appealed to the protesting farmers to return home.

"Our Honourable Prime Minister has given a Guru Purab gift to the protesting farmers of Punjab. In any case these Farm laws were already on the back burner and Supreme Court was also seized of the matter.

"With hardened opposition stand of the farmers for whose benefits these farm laws were designed it was really magnanimous on part of our Prime Minister to announce its withdrawal," said Atul Chaturvedi President, SEA of India.

He said the agriculture sector is crying for massive reforms if it has to become competitive and improve farm incomes.

"Current high MSP (minimum support price) can never be sustainable as it would hurt consumers," Chaturvedi said.

India's farm productivity levels, which are less than 50 per cent of world average in practically all agri commodities, have to go up to improve rural incomes, he added.

"We only hope agri reforms in more politically acceptable manner should continue to be implemented," the

SEA president said.

Dr Kalyan Goswami, Director General, Agro Chem Federation of India (ACFI), welcomed the government's decision to repeal the three farm Laws as it would help to break the ongoing impasse.

"We also appreciate the Prime Minister for his commitment to provide good quality seeds to the farmers, easy claim for damages and offering right price to the farmers for their produce. While the budget allocation on Agriculture has increased by five times since 2014, we expect the financial situation of the farmers to improve steadily," Goswami said.

Thousand of farmers, mainly from Punjab and Western Uttar Pradesh, had been protesting and were encamped at Delhi's borders since November 2020 with a demand that the Farmers' Produce Trade and Commerce (Promotion and Facilitation) Act, 2020, Farmers' (Empowerment and Protection) Agreement on Price Assurance and Farm Services Act, 2020 and the Essential Commodities (Amendment) Act, 2020 be rolled back and a new law made to guarantee MSP for crops.

LORDS REAL ESTATE CONSULTANCY SERVICES

India-Chennai City | Near City | All Property - Buying & Selling

Email : lionpaulraj@gmail.com Web : www.lordsclubs.com

Business Profits used for Social Services

LORDS CLUBS INTERNATIONAL

98405 59673 **97908 55633**

அனைத்து வகையான சோபாக்கள் மற்றும் பர்னிச்சர்களும்
மொத்தமாகவும் சில்லரையாகவும் மிகவும் குறைந்த விலையில்
நிறைந்த தரத்தில் உடனுக்குடன் தயார் செய்து தருகின்றோம்...

Proprietor : **Lords M. Ramar Pandian**

SRI MAHA FURNITURE SMF

SRI MAHA FURNITURE

All Wooden Sofa & Furniture's Manufacturing Wholesale Price & Retail Sale

Cell : 9940333720 | 8056198979

No. 59 KS Nagar 12th Street, kavangarai Puzhal, Chennai - 600 066.

Email : srimahafurniture2015@gmail.com

LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359 / 2013
We Serve
Lords M. Paul Raj
Founder & International President
LORDS CLUBS INTERNATIONAL
- Economic development
- Education Service
- Friendship
- Health service
- Human rights
- Leadership
- Political Service
- Social service
- Spirituality

For Membership Call
98 4055 9673
LORDS CLUBS INTERNATIONAL
Email : lordsclubsinternational@gmail.com
Web : www.lordsclubs.com

LORDS M . PAUL RAJ, Founder & INTERNATIONAL PRESIDENT OF LORDS CLUBS INTERNATIONAL, IS ONE OF THE MOST SUCCESSFUL SOCIAL SERVICE PROVIDERS IN THE WORLD

International social workers help individuals, families, groups, neighborhoods, and communities around the world overcome the challenges they face, such as poverty, substance abuse, or even after a natural disaster.

However, finding international social work positions can be difficult because organizations need candidates that can help people overcome the specific obstacles facing citizens around the world.

Continue reading to find out about the regions that need social workers, a list of issues facing their citizens, and some organizations you could work for.
What Is International Social Work?

Social workers are committed to making a difference in the lives of people within communities. Therefore, international social workers diligently strive to ease suffering and better the lives of people in need around the world.
But that doesn't mean social workers do all of the work themselves.
Instead, social work is about helping those in need to discover new and innovative ways to resolve or cope with the challenges they face. That way, their clients have the skills, knowledge, and empowerment to improve their circumstances and overall life.

Lords Paul Raj, Founder & International President of Lord's Clubs International, is one of the most successful social service providers in the world.